உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 08.06.2026 • மலர் 04 • இதழ்: 159 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 08.06.2026 • Vol : 04 • Issue : 159 • Page : 4 • Rs. 5/-

### ஆசிய கோப்பை ஆக்கி:

# சாம்பியன் பட்டம் வென்ற இந்தியா

## பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து

புதுடெல்லி, ஜூன் 8

ஜப்பானின் காகமிகஹரா நகரில் நடைபெற்ற 18 வயதுக் குட்பட்டோருக்கான (சப்ஜூனியர்) ஆசிய கோப்பை ஆக்கி தொடரில் இந்திய ஆண்கள் அணி சாம்பியன் பட்டத்தை வென்று அசத்தியுள்ளது.

இந்த நிலையில், பிரதமர்மோடி தனது எக்ஸ் தள பதிவில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

'நமது இளம் ஹாக்கி வீரர்களின் அற்புதமான சாதனை. 2026 ஆம் ஆண்டுக்கான 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பையை வென்ற இந்திய 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் ஹாக்கி அணிக்கு வாழ்த்துகள்.

இந்த அணி போட்டி முழுவதும் சிறப்பான திறமையையும் கூட்டுமுயற்சியையும் வெளிப்படுத்தி, இறுதிப் போட்டியில் ஒரு மறக்க முடியாத வெற்றியைப் பதிவுசெய்தது.' இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## அதிமுக தீர்ந்துபோன கட்சி அல்ல, மக்கள் பிரச்சினைகளை தீர்த்து வைத்த கட்சி எடப்பாடி பழனிசாமி

சேலம், ஜூன் 8

எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் நன்றி தெரிவிப்பு நிகழ்வில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:



தவெக ஆட்சி எந்த நேரத்திலும் கவிழும், அந்த ஆட்சியின் நாற்காலியின் 2 கால்கள் இரவல். திமுக கூட்டணிக் கட்சிகள் ஆதரவு அளித்ததால்தான் தவெக ஆட்சி அமைத்துள்ளது. விசக, கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவு இருக்கும் வரைதான் தவெக ஆட்சி. எத்தனை நாட்களுக்கு இந்த ஆட்சி நீடிக்கும் என தெரியவில்லை. ரூ.10 லட்சம் கோடி கடன் இருப்பது தெரிந்தும் கவர்ச்சி அறிவிப்புகளை விஜய் வெளியிட்டது ஏன்?; இப்போது திட்டங்களை அறிவிக்கிறார்கள்; அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்பதை அறிவிக்கவில்லை. மகளிர் உரிமைத் தொகை ரூ.2,500 வெற்று வாக்குறுதியா? அல்லது நிறைவேற்றுவீர்களா? தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்குது.

அரசு அதிகாரிகளே அரசாங்கத்தை நடத்தினால் முதல்அமைச்சர் எதற்கு என மக்கள் கேட்கிறார்கள். அதிமுக தீர்ந்துபோன கட்சி அல்ல, மக்கள் பிரச்சினைகளை தீர்த்து வைத்த கட்சி.

பதவி வந்துவிட்டால் தலைகால் புரியாமல் ஆடுகின்றனர். பதவி வரும் போது பணிவு வர வேண்டும்.திரைப்படத்தில் நடித்து வெற்றி பெற்றீர்களே தவிர மக்களுக்கு சேவை செய்து வெல்லவில்லை.

அரசு அதிகாரிகளே அரசாங்கத்தை நடத்தினால் முதல்அமைச்சர் எதற்கு என மக்கள் கேட்கிறார்கள். அதிமுக தீர்ந்துபோன கட்சி அல்ல, மக்கள் பிரச்சினைகளை தீர்த்து வைத்த கட்சி.

பதவி வந்துவிட்டால் தலைகால் புரியாமல் ஆடுகின்றனர். பதவி வரும் போது பணிவு வர வேண்டும்.திரைப்படத்தில் நடித்து வெற்றி பெற்றீர்களே தவிர மக்களுக்கு சேவை செய்து வெல்லவில்லை. 'மீண்டும் அதிமுக ஆட்சி அமையும். எந்தக் கொம்பனாலும் அதிமுகவை உடைக்க முடியாது, தப்புக் கணக்கு போடாதீர்கள்.

அதிமுகவில் வெற்றி பெற்ற நான்கு பேர் ராஜினாமா செய்து உள்ளார்கள்; உங்களை வரலாறு மன்னிக்காது

இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்டாலின் சார்; கொத்தடிமை கூட்டமே உங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தவெக

சென்னை, ஜூன் 8

தவெக ஐடி விங் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:



மக்கள் சக்தியின் ஆதரவால், தனிப்பெரும் கட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டோம். ஜனநாயக சக்திகளின் ஆதரவால் மனசாட்சி உள்ள மக்களாட்சி அமைக்கப்பட்டது. மக்களின் ஜனநாயக முறையிலான தீர்ப்பை மதித்து, ஜனநாயக சக்திகள் எங்களுக்கு துணை நிற்கின்றன. ஆட்சி என்றால் தனக்கு மட்டுமே. அதிகாரம் என்றால் தன் குடும்பத்திற்கு மட்டுமே என்று சிலர் இருக்கிறார்கள். நாங்கள் அப்படியா இருக்கிறோம்? ஆதரவளித்த ஜனநாயக சக்திகளுக்கு முழு மனதுடன் ஆட்சியில் பங்கையும் அதிகாரப் பகிர்வையும் அளித்தோம்.

கூட்டணி என்ற பெயரில் உடனிருக்கும் கட்சிகளின் மீது சவாரி செய்து, அரசியல் ஆதாயங்களை மட்டும் அனுபவிக்கும் சுயநலம் மட்டுமே கொண்ட தீய சக்தி நாங்கள் அல்ல. கூட்டணியை நாங்கள்தான் அனுப்பி வைத்தோம் என்று பெருந்தன்மை பேசிவிட்டு அவர்களை ஏக வசனத்தில் ஏசுவது எந்த வகை தன்மையில் சேரும் ஸ்டாலின் சார்?

ஆட்சிக் கட்டில் பற்றிய கனவிலேயே தூங்கும் உங்களைதொட்டிலில்போட்டுபுட்டிப்பால்கொடுத்து மேலும் தூங்க வைப்பதுபோல, உங்களை சுற்றி இருப்போர் ஏமாற்றுவது அறியாமல் இருந்தால், நாங்கள் என்ன செய்ய ஸ்டாலின் சார்?

இப்படியே இருந்தால் கொளத்தூரை இழந்தது போல, கோட்டையை இழந்தது போல, மொத்தத்தையும் நீங்கள் இழக்கப் போவது உறுதி. உங்கள் கொத்தடிமை கூட்டமே உங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஸ்டாலின் சார், இது உறுதி.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மின்சார வாரியத்தின் பணியிடங்கள்: தேர்வர்களுக்கு சிறப்பு வயதுத் தளர்வு வழங்க வேண்டும்; வேல்முருகன்

சென்னை, ஜூன் 8

தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவி மின் பொறியாளர் பணியிடங்கள்: 6 ஆண்டுகால நிர்வாகத் தாமதத்தால் பாதிக்கப்பட்ட தேர்வர்களுக்கு சிறப்பு வயதுத் தளர்வு வழங்க வேண்டும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவி மின் பொறியாளர் (AEElectrical) பணியிடங்களுக்கான ஆள்தேர்வில், கடந்த 6 ஆண்டுகால நிர்வாகத் தாமதத்தால் தங்களின் வாழ்வாதாரத்தையும் எதிர்காலத்தையும் இழந்து தவிக்கும் தகுதியுள்ள தேர்வர்களுக்கு, அரசு உடனடியாக "சிறப்பு ஒருமுறை வயதுத் தளர்வு (Special Onetime Age relaxation)" வழங்கி அவர்களின் பணிநியமனத்தை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB) கடந்த 08.01.2020 அன்று 364 உதவி மின் பொறியாளர் (Electrical) காலிப்பணியிடங்களுக்கான அறிவிப்பை வெளியிட்டது. நான்கு வாரங்களுக்குள் அந்த அறிவிப்பு ரத்து செய்யப்பட்டு, 15.02.2020 அன்று புதிய அறிவிப்பை வெளியிட்டது. முந்தைய அறிவிப்பில் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு மே மாதம் தேர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டதால், தேர்வுக்காக தேர்வர்கள் முழு வீச்சில் தயாராகிக் கொண்டிருந்தனர். சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட தேர்வர்கள் ரூபாய் 1000 தேர்வுக்கட்டணம் செலுத்தி விண்ணப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் கோவிட்19 பெருந்தொற்று காரணமாக தேர்வு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையில், 07.05.2021 அன்று தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பொறுப்பேற்றது. அதன்பின், 31.01.2022 அன்று, அப்போதைய அரசின் புதிய கொள்கை முடிவின் படி (TNPSC Act 14 of 2022) மின்வாரிய ஆள்தேர்வுப் பணிகளை இனி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மேற்கொள்ளும் என்றும், ஆண்டுக்கு இருமுறை தேர்வுகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, 04.07.2022 அன்று மின்வாரியத்தின் பழைய அறிவிப்பாணை அதிகாரப்பூர்வமாக ரத்து செய்யப்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த தேர்வர்கள் சென்னையிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நேரில் சென்று முறையிட்டபோது, "விண்ணப்பித்த தேர்வர்கள் அச்சப்படத் தேவையில்லை, TNPSC மூலம் கூடிய விரைவில் இத்தேர்வு நடத்தப்படும்" என அதிகாரிகள் உறுதியளித்தனர். அதை நம்பி தேர்வர்கள் முழு வீச்சில் தயாராகிக் கொண்டிருந்தனர்.

ஆனால், ஆண்டுகள் பல கடந்தும்



இத்தேர்வு குறித்து TNPSC எந்த மறு அறிவிப்பும் வெளியிடாததால் தேர்வர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இந்நிலையில், 26.07.2024 அன்று பொதுப்பணித்துறையில் (PWD) உள்ள 67 உதவி மின் பொறியாளர் காலிப்பணியிடங்களை நிரப்ப TNPSC அறிவிப்பு வெளியிட்டது. அதன்தொடர்ச்சியாக எழுத்துத்தேர்வுகளும் நடத்திமுடிக்கப்பட்டது. இந்நிலையில் தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றொரு கூடுதல் கூடுதல் அறிவிப்பு (Addendum) என்ற பெயரில், ஏற்கனவே ரத்து செய்யப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 364 காலிப்பணியிடங்களில் 211 இடங்கள், 4 மாதங்களுக்கு முன்பு நடைபெற்று முடிந்த பொதுபணித்துறை தேர்வு முடிவுகளிலிருந்து நிரப்பப்படும் என்றும், மேலும் எதிர்பார்ப்பிற்கு மாறாக இப்பணிக்கு 2020 ல் நிர்ணயிக்கப்பட்ட பழைய வயது வரம்பே நிர்ணயிக்கப்பட்டது.

TNPSC ன் இந்த செயல் 6 ஆண்டுகளாக இப்பணிக்கு விண்ணப்பித்து காத்திருந்த தேர்வர்களின் தலையில் இறக்கப்பட்ட பேரிடியாகும். இந்த செயலானது ஏற்கனவே இப்பணிக்கு விண்ணப்பித்து காத்திருந்த தேர்வர்கள்பாதிக்கப்படுவார்கள்என்ற குறைந்தபட்ச நடைமுறை புரிதலின்றி TNPSC ன் இவ்வறிவிப்பு சமூக நீதிக்கு எதிரானதாகும். இவ்வாறான கூடுதல் அறிவிப்பு (Addendum) என்ற பெயரில் ஏற்கனவே பல நிர்வாக காரணங்களால் ரத்துசெய்யப்பட்ட ஒரு துறையின் காலிப்பணியிடங்களை மற்றோரு துறைக்கு நடைபெற்று முடிந்த எழுத்துத்தேர்வு முடிவுகளில் இருந்து நிரப்பப்படுமென்று வெளியிடப்படும் அறிவிப்பானது அடிப்படை தேர்வு விதிமுறைகளுக்கு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு புறம்பானதாகும்.

இதேபோன்ற மற்றுமொரு விதிமீறலை 2025 ஆண்டு அறிவிப்பினிலும் TNPSC செய்தது. இதன்பொருட்டு பாதிக்கப்பட்ட தேர்வர்கள் தமிழ்நாடு மின்சார வாரிய உயர் அதிகாரிகளிடமும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய உயர் அதிகாரிகளிடமும் பலமுறை முறையிட்டாலும் இரு நிர்வாகமும் ஒருவரையொருவர் பரஸ்பரம் குற்றம்சாட்டுவதுடன் நிரந்தர தீர்வு காண முன்வரவில்லை. ஆகையால் தமிழக அரசு இவ்விவகாரத்தில் தலையிட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கிரஸ் கட்சியால் தனியாக நின்று டெபாசிட் கூட பெற முடியாது சீமான் விமர்சனம்

சென்னை, ஜூன் 8

சென்னையில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் தேனிசை செல்லப்பாவின் புகழ் வணக்க நினைவேந்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டு பேசியதாவது:



"திமுக விடம் ஒரு எம்பி சீட்டு பெறுவது, தவெகவிடம் ஒரு எம்பிசீட்டை பெறுவது. அதற்கு எதற்கு ஒரு கட்சியை வைத்துள்ளீர்கள். மாணிக்கம் தாகூர் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெக கூட்டணியில் நின்று வெற்றிபெற முடியுமா? தனியாக நின்று டெபாசிட் கூட பெற முடியாது. நான் தோற்றாலும் நான்கு விழுக்காடு வைத்துள்ளேன். நீங்கள் வென்றாலும் கூட அது வராது. நமது கட்சி ஊடகத் தீண்டாமையுடன் அணுகப்படுகிறது. ஊடகங்கள் பார்வையில் நாம் தீண்டத்தகாதவர்கள். நான் செய்ய வந்தது தேர்தல் அரசியலோ கட்சி அரசியலோ அல்ல, மக்கள் அரசியல். நான் செய்ய வந்தது செய்தி அரசியலோ, விளம்பர அரசியலோ அல்ல, சேவை அரசியல் மற்றும் செயல் அரசியல்." இவ்வாறு அவர் கூறினார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## 'ஸ்மார்ட் மீட்டர் திட்டம் கைவிடப்படவில்லை'
### அமைச்சர் நிர்மல்குமார் பேச்சு



சென்னை, ஜூன் 8

மின் வாரிய ஊழியர்கள் உதவியின்றி மின் பயன்பாட்டைக் கணக்கிடும் ரூ.20,000 கோடி மதிப்பிலான ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைக் கைவிடத் தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியான நிலையில், இதற்கு பல்வேறு பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்நிலையில், ஸ்மார்ட் மீட்டர் திட்டம் கைவிடப்படவில்லை என மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை தமிழக அரசு கைவிடவில்லை. இந்த திட்டத்துக்கான சாத்திய கூறுகள் குறித்து நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம். இதுவரை எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை" என்று தெரிவித்தார்.

# தவெக அரசுக்கு ஆதரவு அளித்த கட்சிகளை தரம் தாழ்ந்து விமர்சிப்பது நல்ல படிப்பினை பெறவில்லை

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர் பேட்டி




தென்காசி, ஜூன்8

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் முகமது அபுபக்கர் தென்காசி மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வந்திருந்த நிலையில் தென்காசியில் உள்ள தனியார் விடுதியில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழக அரசுக்கு ஆட்சி நடத்துவதற்கான போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அந்த அவகாசத்தை வழங்காமல் எதிர்க்கட்சியாக உள்ள திமுக ஆட்சி செய்ய முடியாத அளவிற்கு கடுமையாக விமர்சித்து வருகிறது. கால அவகாசம் வழங்குவது தான் எதிர்க்கட்சிக்குஅழகுதிமுகதனதுதோல்விக்கான காரணத்தை ஆராயாமல் திமுக கூட்டணியில் இடம் பெற்ற தங்களைப் போன்ற கட்சிகளை தரம் தாழ்ந்து விமர்சிப்பது திமுக நல்ல படிப்பினை பெறவில்லை என்பதை காட்டுகிறது

தவெகவுக்கு ஆதரவளித்த காரணத்தினால் பேராசிரியர் காதர் மொய்தீனை விஜயின் ரசிகர் மன்ற தலைவர் ஆகி விட்டார் என்று திமுகவினர் தரம் தாழ்ந்து விமர்சித்து வருகின்றனர் அதிமுக ஆட்சிக்கு திமுக மற்றும் கூட்டணி தலைவர்கள் உதவ வேண்டும் என்று பேசினார்களே இவர்கள் எப்போது எடப்பாடியின் நற்பணி மன்றத்திற்கு தலைவர்கள் ஆனார்கள் என்று முகமது அபுபக்கர் கேள்வி எழுப்பினார். அண்ணாமலையால் தொடங்கப்பட்ட புதிய அமைப்பினால்

இஸ்லாமியர்களின் வாக்கு பிரியாது ஆர்எஸ்எஸ் அமைப்பில் உள்ள உட்பிரிவுகளில் இதுவும் ஒன்று அண்ணாமலை கட்சி ஆரம்பித்தால் தமிழகத்தில் எந்த மாற்றமும் எழுச்சியும் வரப்போவதில்லை என்று கூறினார் அதிமுகவில் ஜெயலலிதாவின் மறைவிற்கு பிறகு நல்ல தலைமை இல்லாத காரணத்தினால் அதிமுக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்றும் அமைச்சரவையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம்பெறுவது சிலருக்கு பிடிக்கவில்லை என்றும் தெரிவித்தார். பெட்ரோல், டீசல் விலை உயர்வினால் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மத்திய அரசு பெட்ரோல்,டீசல் விலை உயர்வை கட்டுப்படுத்த தவறிவிட்டது. போர்க்கால அடிப்படையில் பெட்ரோல், டீசல் விலையை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார். இந்த சந்திப்பின்போது கட்சியின் நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் உடனிருந்தனர்.

## நாகர்கோவில் அருகே

# த வெ க மாவட்ட மகளிரணி நிர்வாகி திடீர் மாயம்

## 3 பக்க கடிதம் சிக்கியது

நாகர்கோவில், ஜூன். 8

நாகர்கோவில் அருகே உள்ள வடக்கு கோணம் சிஎம்சி நகர் பகுதி சேர்ந்தவர் ஸ்டாலின். தொழிலாளியான இவரது மனைவி டார்கஸ் ஷீலா (31). இவர் தமிழக வெற்றி கழகத்தின் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராக உள்ளார். இவர்களுக்கு திருமணம் ஆகி 11 வருடங்கள் ஆகின்றன. 7 மற்றும் 5 வயதில் இரு பிள்ளைகள் உள்ளனர். நேற்று முன்தினம் 6ம் தேதி காலை 5:30 மணிக்கு வீட்டில் இருந்து வெளியே சென்று டார்கஸ் ஷீலா பின்னர் வீட்டிற்கு திரும்பி வரவில்லை. இதையடுத்து அவரது கணவர் மற்றும் உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடினர். ஆனால் எந்த தகவலும் இல்லை. செல்போனை தொடர்பு கொண்ட போது ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. இதை அடுத்து ராஜாக்கமங்கலம் காவல் நிலையத்தில் ஸ்டாலின் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் உடனடியாக வழக்கு பதிவு செய்தனர். பின்னர் ஷீலாவின் அன்றயில் போலீசார் சோதனை செய்தனர் அப்போது டயரி ஒன்றில் அவர் 3 பக்க கடிதம் எழுதி வைத்திருந்தார். அதை போலீசார் கைப்பற்றியுள்ளனர்.

அந்த கடிதத்தில், நான் பண்ணின தப்புக்கு யாரும் உடந்தை இல்லை. என்னுடைய தப்புக்கு நான் மட்டும்தான் காரணம். வேற யாரும் காரணம் இல்லை. என் புருஷனுக்கோ, கட்சிக்கோ, குடும்பத்துக்கோ எந்த சம்பந்தமும் இல்லை. என்னோட முழு மனதுடன் அறிவோடு நான் இதை எழுதுகிறேன். தைரியம் இல்லாத கோழையாக ஊரை விட்டு மட்டு மல்ல, உலகத்தை விட்டு போகணும். ஆனால் அதை இந்த ஊரில் நடத்தி என் புருஷனை கஷ்டப்படுத்த விரும்பவில்லை என எழுதியுள்ளார்.

மற்றொரு பக்கத்தில் எழுதி உள்ள கடிதத்தில் அன்புள்ள கணவருக்கு,



உங்கள் அன்புக்கு நான் தகுதியானவள் இல்லை. என்னை மன்னித்து விடுங்கள். என்னால் உங்களுக்கு அசிங்கம். தான் தெரியாம தப்பு பண்ணிட்டேன். செத்துப் போக தைரியம் இல்லை. ஆனால் இனிமேல் உங்க கண் முன்னே இருந்து உங்களை கஷ்டப்படுத்த விரும்பவில்லை. எங்காவது போய் நான் செத்துப் போகிறேன். மன்னிச்சிடுங்க. என் புள்ளைங்க கிட்ட மன்னிப்பு சொல்லிருங்க. என்னால் எல்லோருக்கும் கேவலம். என எழுதி உள்ளார்.

இது குறித்து போலீஸ் தரப்பில் கூறுகையில், டார்கஸ் ஷீலாவுக்கு கடன் பிரச்சனை இருந்து வந்துள்ளது. சுய உதவி குழுக்களில் கடன் பெற்றுள்ளார். இந்த கடனை திரும்ப அடைக்க நகைகளை விற்றதாகவும், இதனால் கணவன் மனைவி இடையே பிரச்சனைஏற்பட்டதாகவும்கூறப்படுகிறது. இதனால்தான் டார்கஸ் ஷீலா வீட்டிலிருந்து வெளியேறியுள்ளார். அவரது செல்போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. நேற்று காலையில் போன் ஆன் ஆகியது. கோவையில் இருக்கும் தனது சகோதரர் ஒருவரிடம் பேசியுள்ளார். எனவே டார்கஸ் ஷீலா வெளியூருக்கு சென்றிருக்கலாமென சந்தேகம் எழுந்துள்ளது. தொடர்ந்து விசாரணை நடக்கிறது.

## தருமபுரி மாவட்டத்தில்

# மது பாட்டில்கள் மற்றும் கஞ்சா விற்ற 4 பேர் கைது

தருமபுரி ஜூன் 08

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி அருகே உள்ள பிக்கிலி பகுதியில் காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்குள்ள பேருந்து நிறுத்தம் அருகேசின்னசாமி (வயது 49) என்பவர்மதுபாட்டில்களை பதுங்கி வைத்துவிற்றது தெரியவந்தது. இதையடுத்து அவரை காவல்துறையினர் கைது செய்து அவரிடம் இருந்து 26 மது பாட்டில்கள் பறிமுதல் செய்தனர். மேலும் அரூர் காவல்துறையினர் நாச்சினாம்பட்டி ஏரிக்கரை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது காவல்துறையினரை பார்த்ததும் அங்கு நின்று கொண்டிருந்த மூன்று வாலிபர்கள் ஓட்டம் பிடித்தனர். அவர்களை காவல்துறையினர் பிடித்து விசாரணை நடத்தினர் . அப்போது அவர்கள் அரூரை சேர்ந்த மணிகண்டன் (வயது 26), அருண்குமார் (வயது 26), சதீஷ் குமார் (வயது 29) என்பதும் , விற்பனைக்காக கஞ்சா பொட்டலங்களை வைத்திருந்ததும் தெரிய வந்தது. இது தொடர்பாக காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து மூன்று பேரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்த கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

## கொல்லங்கோடு அருகே

# நண்பர் இறந்த சோகத்தில் கார் டிரைவர் தற்கொலை

மார்த்தாண்டம், ஜூன்.8

கொல்லங்கோடு அருகே உள்ள நீரோடி, கல்லடி தோப்பு பகுதியை சேர்ந்தவர் நிக்கோலஸ் என்பவர் மகன் ஷானு (22). இவர் வாடகை கார் டிரைவராக வேலை பார்த்து வந்தார். இவரது நண்பர் அனிஷ் என்பவர் கடந்த ஒன்றை ஆண்டுகளுக்கு முன் மஞ்சள் காமாலை நோயால் இறந்துவிட்டார். நண்பன் இறந்த நாளிலிருந்து ஷானு மிகவும் மனமுடைந்த நிலையில் இருந்துள்ளார். நண்பர் அனிஷ் சென்ற இடத்திற்கு செல்லப் போகிறேன் எனவும், என்னை யாரும் தடுக்க வேண்டாம் என கூறிவந்துள்ளார். அவருக்கு பெற்றோர் மற்றும் நண்பர்கள் ஆறுதல் கூறி வந்தனர். ஆனால் அந்த சோகத்திலிருந்து ஷானு மீண்டு வரவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணி அளவில் சாப்பிட்டு விட்டு தனது அறைக்கு தூங்க சென்றார். நேற்று அதிகாலை 3 மணியளவில் அறையில் மின் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இதை அடுத்து பெற்றோர் மின்விளக்கை அணைக்க கதவை தட்டிய போது கதவு திறக்கவில்லை. உள்ளே இருந்து எந்த சத்தமும் வரவில்லை. இதையடுத்து ஜன்னல் வழியாக பார்த்த போது ஷானு மின்விசிறியில் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். இதை பார்த்ததும் பெற்றோர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது ஷானு இறந்த நிலையில் காணப்பட்டார்.

இது குறித்து கொல்லங்கோடு போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று அவரது உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## களியக்காவிளை அருகே

# பைக் நிலை தடுமாறி கல்லூரி மாணவர் உயிரிழப்பு; நண்பர் படுகாயம்

மார்த்தாண்டம், ஜூன். 8

மார்த்தாண்டம் அருகே உள்ள நட்டாலம் பகுதியை சேர்ந்தவர் சுவாமிதாஸ் மகன் அபிஷ் (18). இவர் கல்லூரியில் லேப் டெக்னீசியன் முதலாம் ஆண்டு படித்து வந்தார். இந்த நிலையில் தனது நண்பரான ஆலஞ்சி பகுதியை சேர்ந்த லியோ டெப்ரின் (17) என்பருடன் பைக்கில் கேரளாவில் உள்ள கோவளம் கடற்கரைக்கு சென்றுள்ளனர். அங்கிருந்து 2 பேரும் ஊருக்கு திரும்பி பைக்கில் வந்து கொண்டிருந்தனர். பைக்கை அபிஷ் ஓட்டினார். லியோடப்ரின்பின்னால்அமர்ந்துவந்துள்ளார்.

களியக்காவிளை அருகே செங்கவிளை பைபாஸ் சாலை பகுதியில் வரும்போது திடீரென பைக் நிலை தடுமாறியதில் சாலையில் இருந்த கான்கிரீட் தடுப்பு சுவர் மீது மோதியது. இதில் பைக்கில் இருந்து தூக்கி வீசப்பட்ட இரண்டு பேரும் பலத்த காயமடைந்தனர்.

இதை அடுத்து அந்த வழியாக வந்தவர்கள் 2 பேரை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்ததில் அபிஷ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். லியோ டெப்ரின் பலத்த காயத்துடன் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## களியக்காவிளை அருகே

# தற்காலிக விசா அளித்து ரூ. 20 லட்சம் மோசடி; பெண் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூன். 8

களியக்காவிளை அருகே உள்ள குளப்புரம் பகுதியை சேர்ந்தவர் ஜெபராஜ் (47). காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். இவர் குழித்துறையில் சுற்றுலா மற்றும் டிராவல்ஸ் கன்சல்டன்சி நடத்திவரும் சத்யகலா (38) என்பவருடன் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. இதை அடுத்து ஜெபராஜ் தனக்கு தெரிந்த 8 பேரை வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார். இதற்கு ஒப்புக்கொண்ட சத்தியகலா 8 பேரிடமிருந்து ஜி பே மூலம் ரூ.20 லட்சத்து 20 ஆயிரம் வரை பெற்றுக் கொண்டதாக கூறப்படுகிறது.

இதைஅடுத்து8பேரும்வெளிநாட்டிற்குசென்றுள்ளனர். இந்த நிலையில் வெளிநாட்டுக்கு சென்ற சில நாட்களிலேயே அவர்களுக்கு விசா முடிந்து விட்டதாக கூறி இந்தியாவிற்கு திரும்பி வந்துள்ளனர். பின்னர் விசாரித்தபோது சத்திய கலா நிரந்தர விசா பெற்றுக் கொடுக்காமல், தற்காலிக விசாவில் 8 பேரையும் வெளிநாட்டிற்கு அனுப்பி பண மோசடி செய்தது தெரியவந்தது.

இது குறித்து ஜெபராஜ் களியக்காவிளை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் போலி விசா அளித்து பணம் பெற்றதாக சத்தியகலா மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தருமபுரி மாவட்டத்தில்

# காச நோய் மருத்துவ பயனாளிகளுக்கு இலவச ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் நிகழ்ச்சி



தருமபுரி ஜூன் 08

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் காசநோய் பிரிவில் இலவச ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காசநோய் மருத்துவ பயனாளிகள் 55 நபர்களுக்கு தருமபுரி மண்டல கனரா வங்கி அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஊட்டச்சத்து பெட்டகத்தை தருமபுரி மாவட்ட துணை இயக்குனர் மருத்துவ பணிகள் (காசநோய்) மரு.M.பாலசுப்பிரமணியம், கனரா வங்கி மண்டல மேலாளர் சுலட்ச்சனா, வங்கி மேலாளர் நீலமணிகண்டன், வங்கி அலுவலர் குருபிரசாத் ஆகியோர் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்கள். மேலும் நோயாளிகளின் குடும்பத்தில் உள்ளவர்கள் காசநோய் பரிசோதனை செய்து கொண்டு நோய் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பிறகு நோய் தடுப்பு மாத்திரைகள் எடுத்துக் கொள்ளவும், சிகிச்சை காலம் முழுவதும் தவறாமல் மாத்திரை எடுத்துக்கொள்ளவும், சிகிச்சை காலத்தில் சத்தான உணவுப் பொருட்களை உட்கொண்டு 2030 ம் ஆண்டிற்குள் காசநோய் இல்லாத தருமபுரியை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என்று துணை இயக்குநர் கேட்டுக் கொண்டார்.

# கோடை வெயிலைத் தணிக்க தண்ணீர் பந்தல் திறப்பு விழா



கிருஷ்ணகிரி, ஜூன் 8

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் .P.முகுந்தன் MLA பிறப்பித்த உத்தரவின்படி,கழக தலைமையின் அறிவுறுத்தலின் படி, கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட கழக செயலாளர்.G.சுரேஷ்ஆலோசனையின் படி, கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட நகர கழக செயலாளர் மதிப்பிற்குரிய அண்ணன்.M.சசிகுமார்★லைமையில், கோடை வெயிலில் பொதுமக்களின் தாகத்தைத் தீர்க்கும் வகையில் ,கிருஷ்ணகிரி நகரத்திற்குட்பட்ட ஒல்டு ஹௌசிங் போர்டு எதிரில் லண்டன் பேட்டை கழக நிர்வாகிகள் சார்பாக, "தண்ணீர்பந்தல்" ஒன்றினைத் திறந்து வைத்து,இந்த நிகழ்வில் வெயிலால் வாடி வந்த பொதுமக்களுக்குப்புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் பழச்சாறுகள்,ஜூஸ். மோர், வாழைப்பழங்கள் மற்றும் தர்பூசணி போன்ற குளுமையான பழங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

## அதியமான்கோட்டையில்

# ஆதரவற்ற காப்பக பள்ளி மாணவ , மாணவிகளுக்கு சீருடைநோட்டு புத்தகம், பேக் மற்றும் எழுது பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி




தருமபுரி ஜூன் 08

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி பிரைம் க்ரோ சிட் மற்றும் உதவும் உறவுகள் அறக்கட்டளை சார்பில், ஆதரவற்ற காப்பக பள்ளி மாணவமாணவிகள் 70 பேருக்கு ரூ. 1 லட்சம் மதிப்பிலான, சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள், பேக் மற்றும் எழுது பொருட்கள் அடங்கிய கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி, தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டையில் உள்ள சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு உதவும் உறவுகள் அறக்கட்டளை நிறுவனர் ராமன் முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சிக்கு பிரைம் க்ரோ சிட் நிர்வாக இயக்குனர்முத்துகுமாரசாமிதலைமை தாங்கி, ஆதரவற்ற காப்பக பள்ளி மாணவ மாணவிகளுக்கு ரூ.1 லட்சம் மதிப்பிலான சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பேக், கல்வி உபகரணங்கள் அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். பின்னர் அவர் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார். இதில் ஆச்சி மசாலா மேலாளர் சிவா, சேலம் மாவட்ட சட்ட நீதி இயக்க துணை தலைவர் மணிமொழி மற்றும் தன்னார்வலர்கள், தொண்டு நிறுவன உறுப்பினர்கள், காப்பக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் பிரைம் க்ரோ சிட் மேலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

# வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம்



திருப்பூர்: ஜூன் 08

மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மரு. கே.ஜி. அருண்ராஜ் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் செ.கமலி ஆகியோர் தலைமையில் (07.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் சட்டமன்ற உறுப்பினர்கள் (திருப்பூர் தெற்கு) எஸ். பாலமுருகன் திருப்பூர் வடக்கு வி.சத்யபாமா (பல்லடம்) ராம்குமார் (காங்கேயம்) என்.எஸ்.என்.நடராஜ் மாநகராட்சி துணை மேயர் ரா. பாலசுப்பிரமணியம் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், யாதவ் கிரிஷ் அசோக் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட வன அலுவலர் ராஜேஷ் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) க. சங்கமித்திரை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# அம்மா மக்கள் முன்னேற்ற கழக திருப்பூர் மாநகர் மாவட்ட செயல் வீரர்கள் மற்றும் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்



திருப்பூர்: ஜூன் 8

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயல் வீரர்கள் மற்றும் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் ஓம் சக்தி கோயில் சாலையில் உள்ள தனியார் திருமண மஹாலில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் இறை ஆர் வெங்கடேஷ் தலைமையிலும் மாநில சிறுபான்மை பிரிவு இணைச்செயலாளர் ஜான் மகேஸ்பிரன்ஸ்சுவா முன்னிலையில் நடைபெற்றது

இதில் முன்னாள் அமைச்சர் கழக துணை பொதுச் செயலாளர் உடுமலை சண்முகவேலு கலந்து கொண்டு புதிய நிர்வாகிகள் அறிமுகம் செய்து சிறப்புறாற்றினார்

இந்த நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரோகிணி கிருஷ்ணகுமார்,ஈரோடு மாவட்ட செயலாளர்கள் மதிவாணன், திருநாவுக்கரசு, வெங்கடேஷ், கோவை மாவட்ட செயலாளர்கள் பாஸ்கர்,சதிஷ், திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் ஆனந்த் குமார், மாவட்ட அவைத் தலைவர் புல்லட் ரவி, மாவட்டத் துணைச் செயலாளர் சுரேஷ் ராஜா, மாவட்ட இணைச்செயலாளர் கீதா, பொதுக்குழு உறுப்பினர் நாகேந்திரகுமார், மாவட்ட பொருளாளர் குமரவேல், அம்மா பேரவை செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட இளைஞரணிச் செயலாளர் தரணி சுரேந்தர்,தொழிற்சங்க பேரவை செயலாளர் சதீஷ், வழக்கறிஞர் அணி மாவட்ட செயலாளர் சுதாகர், மாவட்ட மகளிர் அணி செயலாளர் கலாவதி, இணைச்செயலாளர் அனிதா,துணை செயலாளர் மெர்லீன், வர்த்தக அணி செயலாளர் பிரசாந்த் கிருஷ்ணா, மற்றும் மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக ஒன்றிய கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்,,,

# மஞ்சமேடு மாதேஸ்வரன் கோவில் கும்பாபிஷேக விழா பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராசன் பங்கேற்பு



கிருஷ்ணகிரி, ஜூன் 8

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள அரசம்பட்டி மஞ்சமேடு கிராமத்தில் அமைந்துள்ள மாதேஸ்வரன் கோவில் கும்பாபிஷேக விழாவில் அதிமுகவின் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் இசி.கோவிந்தராஜன் மஞ்சமேடு கிராமத்தில் கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த போது காவேரிப்பட்டணம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் இரவிச்சந்திரன் சால்வை அணிவித்தார் இதில்கட்சி நிர்வாகிகள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்



கோவை கணபதி பகுதியில் உஷா தேவி வாஸ்குலர் மருத்துவமனையை அமைச்சர் சம்பத் குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.உடன் மருத்துவமனை உரிமையாளர் ,தமிழ்நாடு மாநில ஆதிதிராவிட ர் மற்றும பழங்குடியினர் ஆணைய அதிகாரி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தொட்டியம் அருகே

# புதிய டாஸ்மாக் கடை அமைக்க எதிர்ப்பு



திருச்சி, ஜூன் 8

திருச்சி மாவட்டம் தொட்டியம் அருகே தோலுர் பட்டி பகுதியில் புதிய டாஸ்மாக் கடை அமைக்க பூமி பூஜை நடத்தப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அப்பகுதி மக்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் குடியிருப்புகள் அருகில் இருப்பதால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என கூறி, முசிறி வட்டாட்சியரிடம் 50க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்ட மனுவை அளித்தனர். இந்த டாஸ்மாக் கடையை அமைக்கக் கூடாது என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## லால்குடி அருகே

# 100 நாள் வேலை பணியாளர்களை கடித்த கதண்டுகள்



திருச்சி, ஜூன் 9

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே பள்ளிவயல் கிராமத்தில், 100 நாள் வேலை திட்டத்தில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் மீது கதண்டுகள் தாக்குதல் நடத்தியதில் 13 பெண்கள் உட்பட 17 பேர்காயமடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் அரசு ம ரு த் து வ ம னை யி ல் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

## முசிறி

# பங்காரு அடிகளார் பிறந்தநாள் நலத்திட்ட உதவிகள் வழங்கல்



திருச்சி, ஜூன் 8

திருச்சி மாவட்டம், முசிறியில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தின் சார்பில் பங்காரு அடிகளாரின் 86வது அவதார திருநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள்வழங்கும்சமுதாயப்பணிகள் விழா நடைபெற்றது. முசிறி சித்தர் வழிபாட்டு மன்றத்தில் நடைபெற்ற இந்த விழாவில், 9 பயனாளிகளுக்கு கண்புரை அறுவை சிகிச்சைக்காக ரூ27 ஆயிரம், 24 பயனாளிகளுக்கு ரூ25 ஆயிரம் மதிப்புள்ள இலவச கண்ணாடிகள், மற்றும் முசிறி நகராட்சி தூய்மைப்பணியாளர்கள்100 பேருக்கு ரூ35 ஆயிரம் மதிப்பில் வேட்டி சேலைகள் போன்ற நலத்திட்ட உதவிகள்வழங்கப்பட்டன. சங்கத்தின் துணைத் தலைவர் மதியழகன் தலைமை வகித்தார்.

## நாகர்கோவில் அருகே

# மனைவியை தாக்கி சித்திரவதை வங்கி மேலாளர் மீது புகார்

நாகர்கோவில்,ஜூன். 8

நாகர்கோவில் பொன்னப்ப நாடார் காலனி பகுதியை சேர்ந்தவர் சேர்ந்த பெண் ஒருவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இடம் புகார் ஒன்று அளித்தார். அந்த புகாரில் கூறியிருப்பதாவது:

எனது கணவர் தனியார் வங்கி வ மேலாளராக உள்ளார். எங்களுக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு திருமணம்நடந்தது. எனதுகணவருக்குமதுகுடிக்கும் பழக்கம் இருந்து வந்தது. திருமணம் முடிந்த சில நாளிலேயே மது அருந்திவிட்டு வந்து என்னை சித்திரவதை செய்ய தொடங்கினார். நான் குடும்ப நலன் கருதி பொறுமையாக இருந்தேன்.

இந்த நிலையில் சம்பவ தினம் என்னை அவதூறாக பேசி, தாக்கி விருப்பத்துக்கு மாறாக உடலுறவு வைப்பதற்குகட்டாயப்படுத்தினார்.நான்மறுத்ததால் செல்போன் சார்ஜ் வயரால் என்னை சரமாரியாக தாக்கினார். இதில் கைகள் முதுகு பகுதியில் காயம் ஏற்பட்டது. இனி அவருடன் வாழ்ந்தால் என்னை கொன்றுவிடுவார்என்றஅச்சத்தில்நான்வீட்டிலிருந்து வெளியேறி விட்டேன். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த புகாரில் கூறியிருந்தார்.

புகாரின் பேரில் நேசமணி நகர் போலீசார் விசாரணை நடத்த மாவட்ட எஸ்பி உத்தரவிட்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## மார்த்தாண்டம் அருகே

# வக்கீல் மீது தாக்குதல் 3 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூன். 8

மார்த்தாண்டம் அருகே பாகோடு பகுதியை சேர்ந்தவர் தினேஷ் (39). வக்கீல் ஆக உள்ளார். இவர் அந்த பகுதியில் வக்கீல் அலுவலகம் கட்ட முடிவு செய்தார். இதை அடுத்து அதே பகுதியை சேர்ந்த கொத்தனாரான வின்சென்ட் என்பவரிடம் முன்பணமாக ரூ 1 லட்சத்து 40 ஆயிரத்தை கொடுத்துள்ளார். பணத்தைப் பெற்றுக் கொண்ட வின்சென்ட் நீண்ட நாட்கள் கடந்த பின்பும் அலுவலகம் கட்டும் பணியை தொடங்காமல் இழுத்தடித்துள்ளார்.

இதை அடுத்து தினேஷ் ஏன் இன்னும் பணியை தொடங்கவில்லை என வின்சென்டிடம் கேட்டுள்ளார். இதனால் அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சம்பவ தினம் தினேஷ் மேல்புறத்தில் உள்ள ஒரு ஓட்டலுக்கு காரில் சென்றார். அப்போது அங்கு சென்ற வின்சென்ட், ராபி (55) மற்றும் கண்டால் தெரியும் ஒருவர் என 3 பேர் சேர்ந்து தினேஷை கெட்ட வார்த்தைகள் பேசி, திட்டி கீழே தள்ளி தாக்கியுள்ளனர். மேலும் இரும்பு கம்பியால் கார் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தி விட்டு கொலை மிரட்டல் கொடுத்து சென்றனர். தாக்குதலில்காயம்அடைந்ததினேஷ்குழித்துறையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மார்த்தாண்டம் போலீசார் வழக்கு பதிவு செய்து வின்சென்ட் உட்பட 3 பேரும் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




## திருச்சியில்

# ரவுடி வெட்டிகொலை பரபரப்பு சிசிடிவி காட்சி

திருச்சி, ஜூன் 8

திருச்சி திருவெறும்பூர் அருகே அரியமங்கலம் பாரதியார் தெருவைச் சேர்ந்த பிரபல ரவுடி பாதுஷா (24) நேற்று நள்ளிரவு காட்டூர் ஆயில் மில் செக் போஸ்ட்காமராஜர்நகர்வினோபாஜி தெரு பகுதியில் மர்ம நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். சம்பவ இடத்திலேயே உயிரிழந்த பாதுஷாவின் கொடூர கொலை தொடர்பான சிசிடிவி காட்சிகள்வெளியாகிபரபரப்பைஏற்படுத்தியுள்ளது. ஒருவருடன் ஏற்பட்ட கள்ளத்தொடர்பு காரணமாக இந்த கொலை நடந்திருக்கலாம் என்ற கோணத்தில் போலீஸ் எஸ்.பி. டோங்ரே பிரவின் உமேஷ் தலைமையில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருச்சி

# போக்குவரத்து அதிகாரியுடன் பொதுமக்கள் வாக்குவாதம்



திருச்சி, ஜூன் 9

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து நிலையத்தில் வெளியூர்களுக்கு செல்லும் பேருந்துகளில் முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிப்பதாகக் கூறி, பேருந்து நிர்வாக அதிகாரிகள் பொதுமக்களை கட்டாயப்படுத்தி முன்பதிவு செய்ய நிர்பந்தித்தனர். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 12 ம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்களுக்கு உயர் கல்வி வழிகாட்டுதல் வழங்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் மாவட்ட கட்டுப்பாட்டு அறையை துவக்கி வைத்து, பேசினார். இதில் முதன்மை கல்வி அலுவலர் முனைவர் மான்விழி மற்றும் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### தென்தாமரைகுளம்

## எல். எம். எஸ் பள்ளியில் உலகசுற்றுச் சூழல் தினம்

தென்தாமரைகுளம் ஜூன்., 8.

தென்தாமரைகுளம் எல். எம். எஸ் மேல்நிலைப்பள்ளியில் உலக சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்பட்டது உலக சுற்றுச் சூழல் தின நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர்கால்வின் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியை அனு ஜெ. பிரீதா மாணவர்களுக்கு உலக சுற்றுச்சூழல் தினத்தை பற்றி உரையாற்றினார். பெறுப்பாசிரியர் அன்ன சுகந்தி தலைமையில் மரக்கன்று நடப்பட்டது. மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஒலியப்போட்டி உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.



## மாணவர்களுடன் கலந்துரையாடிய ஈரோடு ஆட்சியர்

ஈரோடு ஜூன் 8

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் காபி வித் கலெக்டர் நிகழ்ச்சி நடந்தது . ஈரோடு மாவட்டத்தில் இதில் கடந்த 202526 கல்வி ஆண்டில் முதலமைச்சர் தனித் திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற 28 மாணவியர்களுடன் அவர் கலந்துரையாடினார். அப்போது பேசிய ஆட்சியர் கந்தசாமி மாணவ மாணவியர்கள் கல்வியறிவோடு சமூகம் மற்றும் பொது அறிவும் பெற்று மேம்பட வேண்டும் என்று கூறினார். மேலும் அவர் பேசும் போது மாணவர்கள் சமூக மேம்பாட்டுக்காக தாங்கள் பயிலும் பள்ளி படிப்பினை ஊன்றுகோலாக வைத்து மேலும் முன்னேற பாட புத்தகம் தாண்டி அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு சமூக உணர்வை ஏற்படுத்தும் நாளிதழ்கள் செய்தித்தாள்கள் போன்றவற்றை படிப்பதில் அக்கறை செலுத்த வேண்டும்.

மாணவ, மாணவியர்கள் உயர்கல்வியில் கற்பதற்கு ஏராளமான பாடப்பிரிவுகள் உள்ளது. எனவே தங்களுக்கு விருப்பமான பாடத்தை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரி படிப்போடு அல்லாமல் போட்டித்தேர்வுகளுக்கும் தயாராகும் வகையில் பயிற்சி பெற வேண்டும். தனி மனிதனை சமூகத்தில் உயர்த்துவது கல்வியால் மட்டுமே இயலும். அத்தகைய கல்வியை மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கற்க வேண்டும். மேலும் தொடர்ந்து புத்தகம் வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். மேலும் அவர் தனது அரசுப்பணியில் சேர்ந்த பிறகு சந்தித்த நிகழ்வுகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் பல்வேறு கருத்துக்களைபகிர்ந்துகொண்டதுடன், மாணவ,மாணவியர்களின் பள்ளியில் ஏற்பட்ட சுவாரசியமான நிகழ்வுகள் குறித்து கேட்டறிந்தார். மாணவ மாணவியருக்கு உயர்கல்வி, கல்வியின் முக்கியத்துவம். புத்தகங்கள் படித்தல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் அறிவுரைவழங்கி கலந்துரையாடினார் இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் தனித் திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்ற 28 பள்ளி மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர். பள்ளி மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருக்குறள் புத்தகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தமான்விழி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை இதய தெய்வம் மாளிகையில் அதிமுக மாவட்ட செயலாளர் செ ம வேலுச்சாமி பொறுப்பேற்று அண்ணா சாலையில் உள்ள எம்ஜிஆர் ஜெயலலிதா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## ரவுடி கொலை வழக்கில் தவெக நிர்வாகிகள் கைது




திருச்சி, ஜூன் 8

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் அருகே அரிய மங்கலத்தைச் சேர்ந்த ரவுடி பாதுஷா வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். இந்த வழக்கில் தொடர்புடையதாகக் கூறி தவெக நிர்வாகிகள் பிரசாந்த் மற்றும் குமார் ஆகியோரை போலீசார் கைது செய்துள்ளனர். கொலைக்கான பின்னணி, முன்விரோதம் உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது.




### லால்குடியில்

## ரயில் மோதி அடையாளம் தெரியாத நபர் படுகாயம்

திருச்சி, ஜூண் 8

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே ஆங்கரை பாலாஜி நகர் பகுதியில் ரயில் மோதி அடையாளம் தெரியாத நபர் படுகாயங்களுடன் உயிருக்கு போராடிய நிலையில் மீட்கப்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




### திருச்சி விமான நிலையத்தில்

## நவீன ரேடார் அமைக்க அனுமதி

திருச்சி, ஜூன் 8

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பில் மோனோ பல்ஸ் செகண்டரி சர்வீலன்ஸ் என்ற நவீன ரேடார்கருவி அமைப்பதற்கு விமான போக்குவரத்து இயக்குனரகம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த ரேடார் மூலம் விமானத்தின் வருகை திசை, அளவு மற்றும் பறக்கும் உயரம் போன்ற தகவல்கள் துல்லியமாக பெறப்படும். இந்த ரேடார் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூதூர்மட்டம் பஸ் நிலையப் பகுதியில் குவியும் குப்பைகள் பயணிகள் அவதி

ஊட்டி, ஜூன் 8

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள மேலூர் ஊராட்சிக்குட்பட்ட தூதூர் மட்டம் பஸ் நிலையப் பகுதிக்கு நாள்தோறும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான மக்கள் வந்து செல்கின்றனர். இந்நிலையில் இங்க உள்ள பஸ் நிலையப் பகுதியில் கொட்டப்பட்டு வரும் குப்பைகள் அகற்றப்படாததால் துர்நாற்றம் வீசி வருகிறது.

மேலும் அரசு பஸ்களில் செல்லும் பயணிகளும் குப்பைகளை மிதித்தவாறு பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது.இது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் கூறியும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

தற்போது பருவ மழை துவங்கி உள்ளதால் இப்பகுதியில் தேங்கியுள்ள குப்பைகளால் பல்வேறு சரும நோய்கள் ஏற்படும் அபாயம் உருவாகி வருகிறது எனவே காலம் தாழ்த்தாமல் உடனடியாக குப்பைகளை அகற்றி சுகாதாரத்தை பேணி காக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மதுரை கோ.புதூர் அல் அமீன் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு தமிழ்ச் சங்கங்களின் மண்டல, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்




மதுரை, ஜூன் 8

தமிழ்நாடு தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு மண்டல, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மற்றும் 2வது மாநில மாநாடு நடத்துவது குறித்து ஆலோசனை கூட்டம் மதுரை கோ.புதூர் அல் அமீன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அல் அமீன் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஷேக்நபி மற்றும் மண்டல செயலாளர் செல்வம் வரவேற்புரையாற்றினர். மண்டல தலைவர் கவிஞர், எழுத்தாளர் அழகுராஜ் தலைமை வகித்தார். மாநில தலைவர் தமிழ்ச்செம்மல் கவிஞர் பொன் சந்திரன் அறிமுகவுரையாற்றினார். மாநில துணைத்தலைவர்கள் கவிஞர்கள் தேசிங்குராஜன், தாரை இராஜமாணிக்கம் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் 2வது மாநில மாநாடு நடத்த நாள், இடம் தேர்வு செய்வது, மாநாடு நிகழ்ச்சிகளை வரையறை செய்வது, சிறப்பு விருந்தினர்களை அழைப்பது தொடர்பான மற்றும் இதர தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்திற்கு மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல் மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். மதுரை மண்டல ஒருங்கிணைப்பாளர் கவிஞர் தொல்காப்பியன் நன்றியுரை வழங்கினார்.



தென்காசி மாவட்ட அஇஅதிமுக வழக்கறிஞர் பிரிவை சேர்ந்த வழக்கறிஞர் செல்லத்துரை பாண்டியன் தமிழக வெற்றி கழகத்தின் பொதுச்செயலாளர் என்.ஆனந் முன்னிலையில் தவெகவில் இணைந்தார். தவெகவில் இனைந்த வழக்கறிஞர் செல்லத்துரை பாண்டியன் தமிழக வருவாய்த்துறை அமைச்சர் செங்கோட்டையன் மின்சார துறை அமைச்சர் சி. டி. நிர்மல் குமார் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் ராஜிவ் சமுக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி உள்ளிட்டோரையும் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

## மாணவர்களின் தலைமைத்துவ திறனை வளர்க்கும் "மாண்புமிகு மாணவர்கள்" நிகழ்ச்சி: கலெக்டர் பங்கேற்பு



திருநெல்வேலி, ஜூன் 8

திருநெல்வேலி பாளையங்கோட்டை சாராள் தக்கர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில், மாணவர்களின் தலைமைத்துவத் திறன் மற்றும் ஆளுமைப் பண்புகளை மேம்படுத்தும் நோக்கில் "மாண்புமிகு மாணவர்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ஆனந்த் மோகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 200 மாணவ மாணவியர்கள் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் தனது இளம் வயது அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டு, வாழ்க்கையில் உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து அதனை அடைவதற்கான விடாமுயற்சி, தன்னம்பிக்கை மற்றும் தலைமைத்துவத் திறன்களின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்கள். மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன் மேம்பாட்டிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் வழங்க தயாராக இருப்பதாக உறுதியளித்தார்கள். மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்காக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் "மாண்புமிகு மாணவர்கள்" திட்டத்தின் செயல்பாடுகளையும் பாராட்டினார்கள். முன்னதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் பிரசன்ன குமார், கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஒழுக்கம், சமூகப் பொறுப்பு, சட்ட விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு குறித்த அறிவுரைகளை வழங்கினார்கள். விழாவின் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற பாளையங்கோட்டை மத்திய சிறை கண்காணிப்பாளர் செந்தாமரை கண்ணன் மாணவர்களுடன் கலந்துரையாடி, இளம் வயதில் எதிர்கொள்ளப்படும் பல்வே சவால்கள் மற்றும் அவற்றை வெற்றிகரமாக சமாளிக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கமாக பேசினார்கள்.

மேலும், சில மாணவர்கள் முதல் முறையாக பொதுமக்கள் முன்னிலையில் மைக்கில் பேசிய அனுபவத்தை பகிர்ந்து கொண்டு, தங்களது எதிர்கால இலக்குகள் மற்றும் வாழ்க்கை மாற்றங்கள் குறித்து உற்சாகத்துடன் எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியில் சிறப்பாக பங்கேற்ற மாணவர்களுக்கு மாவட்ட கலெக்டர் நினைவுப் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சிவக்குமார், அன்பாடும் முன்றில் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சுரேஷ், ராஜேஷ், பசுமை மன்ற ஒருங்கிணைப்பாளர் கணேசன் அவர்கள் மற்றும் கல்வித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.